**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 13.06.2025**
**OS. No.20/2018**
**வழக்கு சாட்சி PW.2–அண்ணாமலை , த/பெ.தானப்பன்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கின் வாதி என்னுடைய அண்ணன் ஆவார். அவர் இந்த வழக்கில் சாட்சி சொன்ன விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் என்ன சங்கதிகள் குறித்து முதல் விசாரணை தாக்கல் செய்துள்ளாரோ அதையே தான் நானும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவர் குறுக்கு விசாரணையில் விட்டு விட்ட விவரங்களை குறித்து சாட்சியம் அளிக்க நான் வந்துள்ளேனா என்றால் ஆமாம். வழக்கில் சொல்லியுள்ள சின்னப்பைய கவுண்டர் மகன் ராமசாமி கவுண்டர் என்னுடைய தாத்தா ஆவார். வழக்கில் ராமசாமி கவுண்டரின் வாரிசுகள் யார் யார் என்றும், வாதியின் பங்காளிகள் யார் யார் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். ராமசாமி கவுண்டர் இறந்த தேதி தெரியுமா என்றால் தெரியாது, 50 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். என் முதல் விசாரணையில் அவர் இறந்த தேதி குறிப்பிட்டுள்ளேனா என்றால் நினைவில்லை. என் முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்தேனா என்றால் படித்து பார்த்தேன், தற்போது நினைவில்லை. ராமசாமி கவுண்டருக்கு நான்கு ஆண் வாரிசுகள் மற்றும் இரண்டு பெண் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் ஆண் வாரிசுகள் மட்டும் அனுபவத்தில் உள்ளதற்கு ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் கந்தாய ரசீது தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் தாக்கல் செய்ததாக சொல்லும் கந்தாய ரசீதில் தாவா சொத்தின் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்தின் சர்வே எண்.292/3 ஆகும். நானும், வாதியும் தாவா சொத்தின் அனுபவத்திலுள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டரின் ஒரு மகன் பெயர் காளியப்பன் என்றால் சரிதான். மேற்படி காளியப்பனின் மகன் பெயர் லிங்கேஷ்வரன் என்றால் சரிதான். அந்த லிங்கேஷ்வரன் தான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி என்றால்

சரிதான். ராமசாமி கவுண்டர் அவர்களின் அனைத்து சொத்துக்களையும் இவ்வழக்கில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். என் தந்தை இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.589/1996 என்ற பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கு முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் இவ்வழக்கில் காண்பிக்கப்பட்ட சொத்துக்களை காண்பித்துள்ளோமா என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கின் மேல் முறையீடு மாண்புமிகு மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். இருந்தும் அந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களை குறித்து எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான், நான் அதை பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி லிங்கேஷ்வரன் எப்போதிலிருந்து பத்திர எழுத்தாளர் ஆனார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கிலும், என் முதல் விசாரணை சாட்சியத்திலும் எப்பொழுது அரசியல் வாதிகளுடன் வந்து சொத்தை பிரதிவாதிகள் அபகரிக்க நினைத்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் அவ்வாறு யாரும் வரவில்லை, கிராம நிர்வாக அதிகாரியை அவரின் மேல் அதிகாரிகள் பட்டா வழங்குமாறு மிரட்டினார்கள், அதனால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்தோம். இந்த வழக்கில் என் அண்ணன் மட்டும் தான் தரப்பினர் என்றும், வேறு யாரும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் அரசியல் வாதிகள் மிரட்டியதாக நான் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ராமசாமி கவுண்டரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை, அவரது இறப்பு பதிவு செய்யப்பட்வில்லை. 07.02.1982 ம் தேதியில் அவர் இறந்துவிட்டதாக 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 1ம் பிரதிவாதிதான் ராமசாமி கவுண்டரின் இறப்பு சான்றிதழ் வாங்கினார், அந்த விவரம் 2018ம் வருடம் பட்டா மாறுதலுக்காக நாங்கள் விண்ணபித்தபோது கிராம நிர்வாக அலுவலர் தெரிவித்தார். ராமசாமி கவுண்டர் இறப்பு தேதி குறித்து எங்களுக்கு எந்த மாற்று கருத்தும் இல்லை என்றால் அவர் எப்பொழுது இறந்தார் என்று எங்களுக்கு தெரியாது. என் தாத்தா ராமசாமி கவுண்டர் இறந்தபோது எனக்கு 12 வயது ஆகும். தற்போது என் வயது 62 என நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். 1982 ல் ராமசாமி கவுண்டர் இறந்ததாக 1ம்

பிரதிவாதி பெற்ற இறப்பு சான்றிதழை ஆட்சேபித்து நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ராமசாமி கவுண்டர் என்பவர் காளியப்பன் மற்றும் லிங்கேஷ்வரன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்து இறந்துவிட்டார் என்றும், அதனால்தான் அவர்கள் இறப்பு சான்றிதழ் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டர் எங்களுடன் தான் வாழ்ந்து வந்தார். ராமசாமி கவுண்டர் எங்கள் பராமரிப்பில் இருந்ததற்கு ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. ராமசாமி கவுண்டரின் இறப்பை என் தந்தையோ, என் அண்ணனோ பதிவு செய்தார்களா என்றால் செய்யவில்லை. ராமசாமி கவுண்டர் இறந்த பிறகு அவரது இறப்பு காரியங்கள் அனைத்தையும் காளியப்பன் குடும்பம் தான் செய்தது என்றால் சரியல்ல. 2015 ம் வருடம் வரை ராமசாமி கவுண்டரின் இறப்பு பதிவு செய்யாததால், 1ம் பிரதிவாதி லிங்கேஷ்வரன் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, முறையாக பதிவு செய்தார் என்றால் எனக்கு தெரியாது. 05.06.2017ம் தேதியில் விண்ணப்பம் அளிக்கப்பட்டு, முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 20.02.2018ம் தேதியில் மேட்டூர் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் சார் ஆட்சியர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தான் ராமசாமி கவுண்டரின் இறப்பு தேதி பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி லிங்கேஷ்வரன் இந்த வழக்கில் கண்ட சொத்துக்கள் குறித்து ராமசாமி கவுண்டர் உயில் எழுதி கொடுத்தாக பதில் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னதாக கிராம நிர்வாக அலுவலரிடம் பட்டா மாறுதல் கோரி விண்ணப்பித்தபோது தான் ராமசாமி கவுண்டர் பெயரில் பதிவு செய்யப்பட்ட உயில் குறித்து தெரிந்துகொண்டோம். அந்த பதிவு செய்யப்பட்ட உயிலின் நகலை நாங்கள் பார்க்க முயற்சி செய்தோமா என்றால் இல்லை, அது பொய்யான உயில் என்பதால் முயற்சி செய்யவில்லை. அந்த உயில் பொய்யான உயில் என்று நிரூபிப்பதற்கு முயற்சி ஏதேனும் எடுத்தோமா என்றால் இல்லை. அனைவருக்கும் வெளிப்படையாக தெரியும் வகையில் பத்திர அலுவலகத்திற்கு சென்று, உயில் பதிவு செய்யப்பட்டது என்றும், அதன்அடிப்படையில் 1ம் பிரதிவாதி தான் உயிருடன் இருக்கும் வரையில் அவரும், அவருக்கு பின்னர் அவரது வாரிசுகளான 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2017ம் வருடத்திலிருந்தே 1ம்

பிரதிவாதியிடம் பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அந்த உயில் பொய்யான உயில் என்று சொல்லி, அதை நீக்கறவு செய்ய ஏதேனும் பரிகாரம் கேட்டுள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் எந்த காலத்திலும் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது வாரிசுகளிடம் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் நாங்கள் மட்டும் தான் சுவாதீனத்தில் உள்ளோம், அவர்கள் இல்லை. சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை நாங்கள் இல்லை என்று கூற முடியாது என்றால் சரியல்ல. உண்மையான உரிமையாளருக்கு எதிராக தடையுத்தரவு பரிகாரம் பெறுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 26.06.2025ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.